# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.51 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | கே.எஸ்.நாகராஜன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 10th day of January 2020.

முதல் விசாரணை

நான் தற்போது கோவை வருமானவரி துறை அலுவலகத்தில் வார்டு 2(1) வருமான வரி துறை அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். 2010 ஆம் வருடத்தில் மேற்படி அலுவலகத்தில் வார்டு III (2) வருமானவரிதுறை அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். வருமான வரி ஆணையர் எங்கள் அலுவலகத்திற்கு 4 வருடங்களுக்கான திரு.என்.பழனிசாமி என்பவரது வருமானவரி படிவங்களை சான்றொப்பம் செய்து அனுப்புமாறு கேட்டிருந்தார்கள். மேற்படி பழனிசாமி என்பவரது வருமான வரி கணக்கு எண் AIQPP 5933R ஆகும். 2006-2007 நிதியாண்டிலிருந்து 2009-2010 நிதியாண்டு வரைக்கான நான்கு வருடங்களுக்கான வருமான வரி படிவங்களை சான்றொப்பம் செய்து அனுப்புமாறு கேட்டிருந்தார்கள். வருமான வரி ஆணையர் கேட்டதன்படி மேற்படி வருமான வரி கணக்கு எண் AIQPP 5933R ற்கான படிவங்களை அனுப்பி வைத்தேன். 2006-2007 நிதியாண்டில் மொத்த நிகர வருமானம் ரூ.6,07,770/- இதைத் தவிர விவசாய வருமானம் ரூ.5,42,500/-. 2007-2008 நிதியாண்டின் மொத்த நிகர வருமானம் ரூ.2,55,700/- இதைத் தவிர விவசாய வருமானம் ரூ.5,25,000/-. 2008-2009 நிதியாண்டிற்கான மொத்த நிகர வருமானம் ரூ.10,66,400/- இதைத் தவிர விவசாய வருமானம் ரூ.4,88,000/-, 2009-2010 நிதியாண்டிற்கான மொத்த நிகர வருமானம் ரூ.13,87,140/- இதைத் தவிர விவசாய வருமானம்ரூ.7,37,000/-. மேற்படி வருமானங்கள் திரு.என்.பழனிசாமி அவர்கள் வருமானவரி

அலுவலகத்தில் தாக்கல் செய்த வருமான வரி நமுனாக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் நிதியாண்டில் TDS ரூ.59,978/- உடன் உள்ளடக்கி ரூ.1,77,978/- வருமான வரியாக செலுத்தியுள்ளார். 2007-2008 ஆம் நிதியாண்டில் TDS ரூ.26,821/- உள்ளடக்கி ரூ.49,331/- வருமான வரியாக செலுத்தியுள்ளார். 2008-2009 ஆம் நிதியாண்டில் TDS ரூ.1,69,000/- உள்ளடக்கி ரூ.3,14,811/- வருமான வரியாக செலுத்தியுள்ளார். 2009-2010 ஆம் நிதியாண்டில் TDS ரூ.1,61,940/- உள்ளடக்கி ரூ.3,91,490/- வருமான வரியாக செலுத்தியுள்ளார். 30.3.2007 ஆம் தேதியில் திரு.என்.பழனிசாமி வருமான வரி கணக்கில் ரூ.78,528/- 2005-2006 ஆம் நிதியாண்டிற்கு செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை தவிர TDS ரூ.26,838/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி விவரங்களை கூடுதல் கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது நான் தெரிவித்திருக்கிறேன். நான் வருமானவரி ஆணையருக்கு அனுப்பி வைத்த ஆவணக் கோப்பு Ex.P.99 வரிசையாகும். ( பக்கம் எண் 2603 முதல் 2870 ல் உள்ள ஆவணங்களில் (File No.11) பக்கம் எண்.2611 லிருந்து 2689 வரை உள்ள பக்கங்கள் ஆகும் ) மேற்படி ஆவணங்கள் என்னால் வருமான வரி ஆணையருக்கு அனுப்பப்பட்டவைகள் ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வருமான வரி ஆணையருக்கு எழுதிய வேண்டுகோள் கடிதம் கோப்பில் இல்லையென்றால் சரிதான். அது வருமான வரி ஆணையர் அலுவலகத்தில் இருக்கலாம். வருமான வரி அதிகாரியால் (Head quarters) கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 31.1.2012 ஆம் தேதியிட்ட வருமான வரி அதிகாரி (Head quarters) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் திரு.என்.பழனிசாமி, திரு.பி.பைந்தமிழ், திருமதி.வித்தியா அர்ஜுணன், M/s Vijayalakshmi Palanisamy Charitable Trust., M/s.Thangavel and others, மற்றும் திருமதி.இந்து முருகேசன் ஆகியோரது வருமான வரி விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வருமான வரி கணக்குகளில் M/s.Thangavel and others வருமான வரி படிவங்கள் தாக்கல் செய்யவில்லையென அனுப்பியுள்ளார். திருமதி.இந்து முருகேசன் அவர்களது வருமான வரி விவரங்கள் திருச்சி வருமான வரி சரகத்தைச் சேர்ந்தது என்றும், திருச்சி சரக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. நான் என்.பழனிசாமியின் வருமான வரி

விவரங்களைத்தான் வருமான வரி ஆணையருக்கு அனுப்பினேன். 31.1.2012 ஆம் தேதியிட்ட வருமான வரி அதிகாரி கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் பார்வை கடிதம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை எப்பொழுது விசாரித்தார் என்றால் 2012 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் விசாரித்தார். தேதி நினைவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த வாக்கு மூலத்தில் சென்னைஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக கடிதம் எண்.R.C.252/2011/PUB/HC என்ற கடிதத்தில் கேட்டிருந்ததன்படி ஆவணங்களை அனுப்பியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அது பற்றி தற்பொழுது எனக்கு நினைவில்லை. Ex.P.99 ல் பக்கம் எண்.2611 லிருந்து 2689 ல் மேற்கண்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலக கடித எண். பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் 2006-2007 நிதியாண்டில் ரூ.5,42,000/-மும், 2007-2008 நிதியாண்டில் ரூ.5,25,000/-மும், 2008-2009 நிதியாண்டில் ரூ.4,88,000/-மும் 2009-2010 நிதியாண்டில் ரூ.7,37,000/- என மொத்தம் ரூ.22,92,500/- விவசாய வருமானமாக கிடைத்துள்ளதாக முன்னாள் அமைச்சர் திரு.என்.பழனிசாமி அவர்களது வருமான வரிபடிவத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சொல்லியிருக்கிறேனா என்றால் ஆம் சொல்லியிருக்கிறேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் திரு.என்.பழனிசாமி செலுத்திய மொத்த வருமான வரி தொகையை சொல்லியுள்ளேன். அத்தொகையில் TDS சேர்த்து சொன்னேனா அல்லது சேர்க்காமல் சொன்னேனா என்றால் மொத்தமாகத்தான் சொல்லியுள்ளேன். மொத்த வருமானவரி செலுத்தியதைச் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு TDS தொகையை பற்றி குறிப்பிட்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் TDS தொகையை வருமான வரி தொகையிலிருந்து பிரித்துச் சொல்லவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் TDS தொகையை Split செய்து சொல்லவில்லை. மொத்தமாகத்தான் சொல்லியுள்ளேன். 2005-2006 நிதியாண்டிற்கான வருமான வரியாக 30.3.2007 ஆம் தேதி அன்று ரூ.78,528/- செலுத்தப்பட்டுள்ளது. அத்தொகை TDS இல்லாமல் செலுத்தப்பட்டதாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். 31.1.2012 கடிதத்தில் கண்ட மற்ற வருமானவரி

கணக்கர்களில் திரு.என்.பழனிசாமியின் வருமான வரி விவரம் தவிர மற்றவர்களின் விவரங்களை நான் சொல்லவில்லை.

மறு விசாரணை இல்லை

ஒம்/கே.எஸ்.நாகராஜன்

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.52 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | ஆர்.ரகுபதி | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 10th day of January 2020.

முதல் விசாரணை

நான் கோயமுத்தூர் வருமான வரி அலுவலகத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்து 30.4.2019 ஆம் தேதி அன்று ஓய்வு பெற்று விட்டேன். நான் தற்பொழுது 26/43, ஓம்சக்தி நகர், போலீஸ் குவார்ட்டர்ஸ்ரோடு, கணபதி, கோயமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். 2010 ஆம் வருடத்தில் கோயமுத்தூர் வருமான வரி ஆணையர் அலுவலகத்தில் கம்பெனி வார்டு-1 ல் வருமான வரி துறை அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். வருமான வரி ஆணையர், **M/s** Vijayalakshmi Palanisamy Charitable Trust (PAN No.AAATV9443N ) சம்மந்தப்பட்ட 2006-2007 வருமான வரி கணக்கு ஆண்டு முதல் 2010-2011 வருமான வரி கணக்கு ஆண்டு வரைக்கான வருமான படிவங்களின் நகல்களை கேட்டிருந்தார்கள். அதன்படி வருமான வரி அணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வருமான வரி ஆண்டுகளில் எவ்வித வருமான வரியும் செலுத்தவில்லை. வருமான வரி NIL என்றே காண்பிக்கப்பட்டுள்ளது. 2006-2007 மற்றும் 2007-2008 ஆகிய வருமான வரி ஆண்டுகளில் (Assessment year) மேற்படி டிரஸ்ட்டிற்கு திரு.என்.பழனிசாமியிடமிருந்து எவ்வித வருமானமும் வந்ததாக இல்லை. 2008-2009 வருமான வரி ஆண்டில் (நிதியாண்டு 2007-2008) இருப்பு அறிக்கையில் ரூ.5,25,000/- 31.3.2008 தேதியில் உள்ளது. மேற்படி தொகை மேற்படி டிரஸ்ட்டின் Founder

திரு.என்.பழனிசாமி பெயரில் உள்ளது. 2008-2009 நிதியாண்டில் (2009-2010 வருமான வரி கணக்கு ஆண்டு ) 31.3.2009 தேதியில் ரூ.13,25,000/- மேற்படி Founder trustee Thiru.N.Palanisamy என்பவரது பெயரில் இருப்பில் உள்ளது. நிதியாண்டு 2009-2010 (2010-2011 வருமானவரி ஆண்டு) 31.3.2010 தேதியில் ரூ.24,75,000/- மேற்படி Founder trustee Thiru.N.Palanisamy என்பவரது பெயரில் இருப்பில் உள்ளது. மேற்படி விவரங்களை டிரஸ்ட் குறித்த வருமான வரி படிவங்கள் மூலம் நான் தெரிந்து கொண்டேன். மேற்படி ஆவணங்கள் ( பக்கம் எண் 2603 முதல் 2870 ல் உள்ள ஆவணங்களில் (File No.11) பக்கம் எண்.2691 முதல் 2867 வரை உள்ள பக்கங்கள் ஆகும் ) அது Ex.P.100 வரிசையாகும். இது சம்மந்தமாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும் போது Ex.P.100 ல் உள்ள கடிதங்களைப்பார்த்துத்தான் விவரங்களைச் சொன்னேனா என்றால் சரிதான். M/s Vijayalakshmi Palanisamy Charitable Trust என்பதற்கு யார் Founder என்பது குறித்த விவரங்கள் Ex.P.100 ல் உள்ளதா என்றால் Balance sheet ல் திரு.என்.பழனிசாமி Founder Trustee என குறிப்பிடப்பட்டுள்ளது. 2008 ஆம் வருடத்திய Balance sheet ல் மேற்படி டிரஸ்ட்டில் திரு.என்.அர்ஜுணன், திரு.பி.பைந்தமிழ், திருமதி.இந்து முருகேசன், டாக்டர் வித்தியா கோகுல், திரு.ஏ.சூரியா ஆகிய பெயர்கள் Trustees என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி டிரஸ்ட்டிற்கு எந்த, எந்த நிறுவனத்திடமிருந்து பணம் வந்தது என்பது பற்றி விவரம் உள்ளதா என்றால் 31.3.2008 Balance sheet ல் ரூ.3,38,46,900/- டிரஸ்ட்டின் இருப்பு தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை M/s Marries cement Private Limited என்ற நிறுவனத்திலிருந்து ரூ.3,26,90,000/- டிரஸ்ட்டிற்கு வந்துள்ளது. திரு.என்.பழனிசாமி Founder பெயரில் ரூ.5,25,000/-மும், டிரஸ்டி திரு.என்.அர்ஜுணன் பெயரில் ரூ.3,81,900/-மும்,திரு.பி.பைந்தமிழ் டிரஸ்ட்டி பெயரில் ரூ.1,00,000/-மும்,திருமதி இந்து முருகேசன் பெயரில் ரூ.50,000/-மும், டாக்டர் வித்தியா கோகுல் பெயரில் ரூ.50,000/-மும், திரு.ஏ.சூரியா பெயரில் ரூ.50,000/- ஆகியோர்கள் பெயரில் இருப்பு உள்ளது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் 2006-2007 நிதியாண்டில் ரூ.6,33,616/-, 2007-2008 நிதியாண்டில் ரூ.8,00,000/- மற்றும் 2008-2009 நிதியாண்டில் ரூ.11,50,000/- ஆகிய தொகைகள்

திரு.பழனிசாமி அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாக வருமான வரி படிவங்களில் இருப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என நான் சொல்லியிருக்கிறேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 2007-2008 நிதியாண்டில் ரூ.5,25,000/- 31.3.2008 ஆம் தேதி அன்று இருப்பு இருப்பதாக உள்ளது. அது என்.பழனிசாமியிடமிருந்து டிரஸ்ட்டிற்கு வந்ததாக வருமான வரி படிவங்களில் தெரியாது. Trust Balance sheet ல் காணப்படும் இருப்பு தொகை திரு.என்.பழனிசாமியிடமிருந்து வரவு வந்ததாகவே கருதப்படும். 2006-2007 நிதியாண்டில் ரூ.6,33,616/-, 2007-2008 நிதியாண்டில் ரூ.8,00,000/-, 2008-2009 நிதியாண்டில் ரூ.11,50,000/- என்ற தொகைகள் Ex.P.100 ல் குறிப்பிடப்பட்டுள்ளனா என்றால் மேற்கண்ட அளவு தொகைகள் குறிப்பிடப்படவில்லை. திரு.என்.பழனிசாமியிடமிருந்து தொகை வந்ததாக நான் சொல்வது ஒரு அனுமானத்தின்பெயரில் ஆனது என்றால் சரியல்ல. Ex.P.100 ல் நான் சொல்வது போல் அவ்வாறான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/ஆர்.ரகுபதி